விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 342 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 10 சனிக்கிழமை (26.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



2021 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்த பரீட்சைப் பெறுபேறுகளை www.doenets.lk என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையத் தளத்தில் பார்வையிட முடியும்.

அத்துடன், www.results.exams.gov.lk என்ற இணையத் தளத்தின் ஊடாகவும் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

11

## தலைவர் பிரபாகரனுக்கு இன்று பிறந்தநாள்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இன்று 68 ஆவது பிறந்த தினமாகும்.

தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வழமையாகவே வெகு விமர்சையாகக் கொண்டாடப்படும்.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது

11

# அரசுடன் பேச்சை ஆரம்பிக்க

# தமிழ் கட்சிகள் கூட்டத்தில் முடிவு

- மூன்று பிரதான நிபந்தனைகளை அரசிடம் விதிப்பதற்கு தீர்மானம்.
- இறுதித் தீர்மானம் எடுக்கமுன் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் கலந்துரையாட முடிவு.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## யாழைச் சேர்ந்த இரு பெண்கள் கட்டுநாயக்கவில் கைது

11

தமிழர் விடயத்தில்

## நீதியுடன் செயற்படுக

சிறீதரன் கோரிக்கை



11

## விசமிகளால் உடைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்ல மேடை

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட மேடை உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக தரவை மாவீரர் தின ஏற்பாட்டுக்குழு தலைவர் வி.லவகுமார் தெரிவித்தார்.

நேற்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

நாங்கள் மாவீரர் துயிலும் இல்லத்தில் மேடையொன்றை அமைத்திருந்தோம். நேற்று காலை நாங்கள் சென்று பார்த்தபோது குறித்த மேடை விசமிகளினால் உடைக்கப்பட்டு

11

## கூட்டமைப்பின் தீர்மானம் அமைச்சர் டக்ளஸ் வரவேற்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களின் போது, நிலைமைகளுக்கு ஏற்ப கலந்தாலோசனை மூலம் தீர்மானங்களை மேற்கொள்வது என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக பேசுகின்ற போது, இணைந்த வடக்கு கிழக்கில் சமஸ்டி முறையிலான அதிகார பகிர்வையே தீர்வாக வலியுறுத்தியதன் பின்னர் பேச்சுவார்த்தையின் நிலைமைகளுக்கு ஏற்ப, விட

11

## ராஜபக்ஷக்களிடம் பதவி வேண்டி செல்லவில்லை

### சபையில் சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு தாம் அனுப்பிய கடிதம், தாம் தனிப்பட்ட ரீதியில் அனுப்பிய கடிதம் அல்ல என்றும், தமது பாராளுமன்றக்குழுவின் அனைவரும் இணைந்து அனுப்பிய கடிதம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

11

## யாழில் நீண்ட நாட்களாக திருட்டில் ஈடுபட்டவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீண்ட நாட்களாக பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து வந்த சங்கிலித் திருடர்கள் மாவட்ட சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக 40இற்கும் மேற்பட்ட பிடியாணைகள் நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 60இற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையிலும் பொலிஸாரால் சந்தேக நபர்களைக் கைது செய்ய முடியாதிருந்தது.

இந்தநிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் சந்தேக நபர்களை நேற்று கைது செய்துள்ளனர்.

நாவற்குழி மற்றும் அல்வாயைச் சேர்ந்த 42 மற்றும் 43 வயதான சந்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசா கட்டணங்கள் உயர்வு

(கொழும்பு) -

2023 வரவு செலவுத் திட்டத்தின்படி, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் விசாக்களுக்கான கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களை அதிகரித்துள்ளது.

டிசம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான விசேட அறிவிப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கான கட்டணம் 2,000 அமெரிக்க டொலர்களாக திருத்தப்பட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை பெறும் 22 வயதுக் குட்பட்ட மனைவி அல்லது குழந்தைக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கான கட்டணம் 500 டொலர்களாக திருத்தப்பட்டுள்ளது.

குடியுரிமையின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கான கட்டணம் 2,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுதிணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)


## தேவை

டிமோ பட்டா வாகனம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு (C-5334)

076 526 6717

வேலையாள்

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் புத்தகக் கடைக்கு போட்டோ பிரதி எடுக்கத் தெரிந்த/ பழக விரும்பும் பெண் பிள்ளை தேவை.

077 314 4612, 075 314 4611 (13581)

## PHYSICS

A/L 2024

தனி, குழு வகுப்புக்கள்

யாழ் : பிறவுண் வீதி

இணுவில் : கந்தசாமி கோவில் அருகாமை

அளவெட்டி : மாசியப்பிட்டி

T.u Jinthu

076 603 4895 (13580)

## பகுதி நேர வேலை வாய்ப்பு

அப்பம் செய்யத் தெரிந்த அனுபவமுள்ள வேலையாள் தேவை.

- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- வயது : 18 - 50
- யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

077 322 3118 (13578)

## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளிற்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

Hybrid International Hub (pvt) LTD

076 250 0098 (C-5330)


## மணிவிழா வாழ்த்து



திருமதி தேஜா

கமலேஸ்வரன்

(பயிற்றப்பட்ட ஆசிரியர் - ஆங்கிலம்)

பிறந்த திகதி - 26.11.1962

முதல் நியமனத் திகதி - 27.04.1987

21.09.1987 - 19.01.1992
கிளி/வேரவில் அ.த.க.பாடசாலை

20.01.1992 - 31.12.1993
பலாலி ஆசிரியர் கலாசாலை

01.01.1994 - 16.02.1994
கிளி/வேரவில் அ.த.க.பாடசாலை

17.02.1994 - 01.09.1998
கிளி/பளை மத்திய கல்லூரி

02.09.1998 - 05.04.2018
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

06.04.2018 - 25.11.2022 இன்றுவரை
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பாடசாலைச் சமூகம்
யா/இந்துக் கல்லூரி

(C-5328)

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்

மண்ணில் 10 . 08 . 1936



விண்ணில் 17 . 11 . 2020

அமரர்

## மாணிக்கம் வேலும்மயிலும்

(உரிமையாளர் - ஈஸ்வரி அரிசி ஆலை - எள்ளாங்குளம், சமரபாகு)

திதி : கார்த்திகை வளர்பிறை மூன்றாம் நாள் (26.11.2022)

கண்ணுக்கு ஒளியாய் நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் - என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகிறோம்

நீங்கா நினைவில்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்

ஈஸ்வரி இல்லம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

(C-5333)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 814 7389, 077 986 5457 (13583)

## வேலை வாய்ப்பு

இலங்கையின் முதற்தர நிறுவனத்தில் யாழ். மற்றும் கிளிநொச்சி கிளைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

வெற்றிடங்கள்

**Cluster Manager**

தகைமைகள்
- க.பொ.த உ/த சித்தி
- 2 வருட துறைசார் அனுபவம்

**Team Manager**

தகைமைகள்
- க.பொ.த உ/த சித்தி
- ஒரு வருட துறைசார் அனுபவம்

**Financial Planner**

தகைமைகள்
- க.பொ.த உ/த

நன்மைகள்
- உயர் வருமானம்
- சுய அபிவிருத்தி
- உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாக்கள்
- பதவி உயர்வு வாய்ப்பு
- சர்வதேச தரத்திலான பயிற்சி



இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கையின் பாரிய நிறுவனத்துடன் இணைந்து உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை வளமாக்குங்கள்.

யாழ்ப்பாணம் 077 603 8773 (13572)

கிளிநொச்சி 077 539 1655


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்டுகளுக்கு தடை

## இலங்கையில் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் 13 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு வழங்கிய உரிமம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.**

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக ஆட்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் பரிந்துரைப்பதற்கும் பணியகத்திடம் இருந்து பதிவு உரிமம் வைத்திருப்பது கட்டாயமாகும்.

அத்தகைய உரிமத்தைப் பெறுவதற்கு 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பணியகச் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 4 மற்றும் 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டங்களின்படி, வெளிநாட்டு வேலைக்காகப் பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் அவர்களின் ஒப்பந்த சேவைக் காலத்தில் விசாரிக்கப்பட வேண்டும். மற்றும் பணியிடத்தில் ஏதேனும் பிரச்சினையான சூழ்நிலை இருந்தால், தேவையான நிவாரணம் வழங்கப்பட வேண்டும். மேலும், வேலைவாய்ப்பு ஒப்பந்த விதிமுறைகளை மீறாமல், அத்தகைய நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, வேலைவாய்ப்புகளை வழங்குவது சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு நிறுவனத்தின் பொறுப்பாகும்.

சேவை ஒப்பந்த மீறல்கள் தொடர்பாக பணியகத்திற்கு வேலை தேடுபவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் தீர்வுகளை வழங்க முன்வராத வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களும் பணியகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறியுள்ளதால், பணியகம் இது தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன்படி, நீதிமன்றத்தினால் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாலும் நீதிமன்றத்தை தவிர்க்கும் நோக்கில் அந்தந்த நிறுவனங்களின் உரிமையாளர்களும் செயற்படுவதால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணியக உரிமத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்வதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (நி)

# 9 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் சீனாவினால் நன்கொடை

(கொழும்பு)

சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட டீசல் சரக்குகளை ஏற்றிய 'சுப்பர் ஈஸ்டன்' என்ற கப்பல் சிங்கப்பூரில் இருந்து நாட்டிற்கு வரவுள்ளதாக சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

அந்த கப்பலில் இருந்து 10.6 மில்லியன் லீற்றர் (9,000 மெற்றிக்தொன்) டீசல் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதாக சீனத் தூதரகம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் இன்று கொழும்பை வந்தடையவுள்ளதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்காக சீனாவினால் இந்த டீசல் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. (நி)

# பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் விரைவில் வெளியிடப்படும்-சுசில்

(கொழும்பு)



பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் விரைவில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உபகரணங்களுக்கான செஸ் வரியை நீக்குவது தொடர்பில் நாளை மறுதினம் அமைச்சரவையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# பாடசாலை விடுமுறைக் காலத்தை குறைக்க நடவடிக்கை-கல்வி அமைச்சர்

(கொழும்பு)

பாடசாலை விடுமுறை காலத்தை அடுத்த வருடம் முதல் குறைத்து கற்றல் மற்றும் கற்பித்தல் செயல் முறைக்கான நேரத்தை அதிகரிக்க முயற்சிப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.


இதன்படி, அடுத்த ஆண்டுக்குள் பாடத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்ய முயற்சிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் இதனை அவர் தெரிவித்தார். (நி)

இதேவேளை, பாடசாலை

# மரண அறிவித்தல்

## இளையதம்பி துரைராஜா



அன்னை மடியில் 03.04.1946 ஆண்டவன் அடியில் 22.11.2022

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். **இளையதம்பி துரைராஜா** அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று (22.11.2022) இறைபாதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் மதுரம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அகிலாண்டேஸ்வரி, நவரட்ணராஜா, நீலாம்பாள் மற்றும் மகேஸ்வரி, செல்வராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற துருபதராஜ் மற்றும் விதுரராஜ் (இலங்கை), குமணராஜ் (கனடா), விமலராஜ் (இலங்கை), உதயராஜ் (இலங்கை), சத்தியராஜ் (கனடா), தர்மினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதிமலர் (இலங்கை), சுஜிதா (கனடா), நிசாந்தினி (இலங்கை), லோஜிதா (இலங்கை), ஜெகதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரா, புருஷோத், டினோசாந் (இலங்கை), புருஷோத், பிரவீன், துருபன், மதுரன், தென்றல் (கனடா), அக்சயா, டிபுஜன், ஆத்மீகா (இலங்கை), ஷாஜெத், சஸ்மிதா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, ஏரம்பமூர்த்தி மற்றும் செல்லபாக்கியம் (இலங்கை), ஆனந்தராஜா (இலங்கை), தியாகராஜா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5331)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**(மகன் விமலன்)**

**077 312 5386**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கானாவுக்கு எதிராக வெற்றி கண்டது போர்த்துக்கல்



கட்டார் 2022 உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 3 ஆவது ஆட்டத்தில் கானாவை - போர்த்துகல் அணி 3:2 கோல்கள் விகிதத்தில் வென்றது.

குழு எச் இலுள்ள 'இவ்விரு அணிகளுக்கு இடையிலான போட்டி தலைநகர் டோஹாவிலுள்ள 974 அரங்கில் நடைபெற்றது.

இடைவேளை வரை எந்த அணியும் கோல் அடிக்கவில்லை.65 ஆவது நிமிடத்தில் போர்த்துகல் அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி கோல் புகுத்தினார்.

ஆனால், 73 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் பின்வரிசையில் ஏற்பட்ட தடுமாற்றங்களுக்கு மத்தியில் கானா வீரர் அண்ட்றே அயேவ் கோல் புகுத்தினார்.

இதனால் கோல் எண்ணிக்கை சமநிலையை அடைந்தது.

பின்னர் போர்த்துக்கல் அணி மேலும் இரு கோல்களை அடித்தது. எனினும், 89 ஆவது நிமிடத்தில் கானா வீரர் புகாரி, கானாவின் 2 ஆவது கோலை புகுத்தினார். இதனால் இப்போட்டியில் 3:2 கோல்கள் விகிதத்தில் போர்த்துக்கல் வென்றது. (4)

## சுவிஸ் நாட்டின் குறும்படப் போட்டி
# ஈழத்தைச் சேர்ந்த கலையம்சனின் குறும்படம் இறுதிக்குத் தெரிவு



சுவிஸ் நாட்டில் நடைபெறும் "OSTSCHWEIZER KURZFILMWETTBEWERB 2022" குறும்படப் போட்டியில் ஈழத்து சண்டிலிப்பாயைச் சேர்ந்த கவிதரன் உமாதம்பதியரின் மகன் கலையம்சனின் குறும்படம் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றிய 70 குறும்படங்களில் 6 குறும்படங்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன. இதில் கலையம்சன் நடித்து தயாரித்த " NO WAR" எனும் தலைப்பிலான குறும்படம் எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி செங்காளன் மாநிலத்தில் நடைபெறவுள்ள குறும்பட விழாவில் காட்சிப்படுத்தப்பட்டு வெற்றிக்குரிய குறும்படங்கள் அறிவிக்கப்படவுள்ளன.

இந்தக் குறும்படத்தில் எமது தாய்மண் சுமந்த பெருவலியை சிறுபகுதியாக போட்டி விதிமுறைகளுக்கு உட்பட்டு ஜேர்மன் மொழியில் கூறப்பட்டுள்ளது.(4-6)

# தேசிய மட்ட உதைபந்தாட்டம் மகாஜனக் கல்லூரி சம்பியன்



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்ட தொடர் கொழும்பு களனிய பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை 17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணியை எதிர்த்து பொலநறுவை பன்டிவெவ மகா வித்தியாலய அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணி வீராங்கனையும் அணித் தலைவியுமான லயன்சிகா அனல் பறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அசத்தினார்.

இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் இரு அணிகளாலும் மேலதிக கோல்கள் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை.

இதனால் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-6-90-105)


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 12.12.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட உணவகம் | கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| சேர்.பொன்.இராமநாதன் அவைகாற்று மற்றும் காண்பிய பீட உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| சித்த மருத்துவ அலகு உணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/=இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000006000268 இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000006000276 இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல. 021 222 6716) பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C-5332) 25.11.2022


# எரிபொருள் இறக்குமதி குறித்து அரசாங்கம் விசேட தீர்மானம்



(கொழும்பு)

சர்வதேச நீதி வரையறைக்கு உட்பட்டு ரஷ்யாவிடமிருந்து சலுகை விலையில் எரிபொருளை பெற்றுக் கொள்ள பல சுற்றுப்பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் அலி சப்ரி இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்று வரும் யுத்தம் காரணமாக இலங்கை நேரடியாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

அது மாத்திரமின்றி, நிலக்கரி, தானியவகைகள், மற்றும் உரம் ஆகியனவற்றை இறக்குமதி செய்வதிலும் இலங்கை பாரிய சவால்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையிலான யுத்தத்திற்கு தீர்வு காணப்படுவது அவசியமாகும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஆசிரியர்களுக்கான ஆடை தொடர்பில் இதுவரை தீர்மானங்கள் இல்லை
## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆடை தொடர்பில் இதுவரை கொள்கை ரீதியான எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இதுவரை காலம் காணப்பட்ட முறைக்கு அமையவே, பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சமூகமளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

விரும்பிய ஆடையில் ஆசிரியர்கள் சிலர் பாடசாலைக்கு சென்றமை தொடர்பில் விசாரணைகளின் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விலை குறையும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் பொருளா தார நெருக்கடி நிலை காரண மாக அரிசி உள்ளிட்ட அத்தியா வசியப் பொருட்களின் விலைகள் பன்மடங்காக அதிகரித்தன.

இந்நிலையில் ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 35 - 40 ரூபாவினால் குறைக்கப் படலாம் எனத் தெரியவந்துள் ளது.

ஒரு கிலோ நெல்லின் விலை இரு பத்து நான்கு ரூபாவினால் வீழ்ச்சியடை ந்துள்ளதுடன், நேற்று முன்தின நில வரப்படி ஒரு கிலோ நெல் 101 ரூபாவாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

ஒன்றரை மாதங்களுக்கு முன், ஒரு கிலோ நெல்லை 125 ரூபாவுக்கு, மில் உரிமையாளர்கள் கொள்முதல் செய்த னர்.

மில் உரிமையாளர்கள் அறுப த்து நான்கு கிலோகிராம் கொண்ட நெல் மூடையை எட்டாயிரம் ரூபாவுக்கு கொள்வ னவு செய்த போதிலும், நேற்று முன்தினம் ஒரு நெல் மூடை ஆறாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு விற்பனையானது.

இந்த பருவ அறுவடையின் போது விவசாயிகளிடம் இருந்து ஒரு மூடை நெல் 4500 ரூபா விற்கு கொள்வனவு செய்ய பாரிய ஆலை உரிமையாளர்கள் மத்தியில் இடம்பெற்ற கலந்து ரையா டலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு கிலோ நெல் எழுபது ரூபாவுக்கு வாங்குவதே அவர்களின் இலக்காக உள்ளது. இந்நிலையில் ஒரு கிலோகிராம் அரிசியின் விலை 35 - 40 ரூபாவினால் குறைக்கப்பட லாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# கறவை பசுக்கள் இறக்குமதி விடயத்தில் பாரிய மோசடி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான பகுதியில், கறவை பசுக் களை இறக்குமதி செய்வது தொடர்பான விடயத்தில் பாரிய மோசடி ஒப்பந்தம் நடந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கோப் குழு கூட்டத்தில் கடந்த புதன்கிழமை தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையால் நடத்தப்படும் பால் பண்ணைக ளுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான பகுதியில், அவுஸ்திரேலியாவில் இருந்து 5,000 கறவை பசுக்களை இறக்குமதி செய்வத ற்கு இலங்கை 37.3 மில்லியன் அமெ ரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது.

எனினும் முறையான கொள்முதல் செயல்முறையைப் பின் பற்றாமல் அவு ஸ்திரேலியாவின் வெல்லார்டில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்ட கறவை பசுக் களில் பெரும்பாலானவை இலங் கையின் காலநிலைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் இறந்து விட்டன.

இதன் காரணமாக இந்தத் திட்டம் தோல்வியடைந்தது. இதன் பின்னர், 2018 இல் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டு அமைச்சு, மீண்டும் 20,000 கறவை பசுக்களை இறக்குமதி செய்ய முடிவு செய்தது. இலங்கை, நெதர்லாந்தில் இருந்து 237 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றது, இதன்மூலம் 5,000 பசுக்களை இறக்குமதி செய்தது.

எனினும் இந்த பசுக்களில் பெரும் பாலானவை பசு வளர்ப்போருக்கு வழங் கப்பட்ட பிறகு நோய்வாய்ப்பட்டு இறந்தன, அதேநேரத்தில் 5,000 பசுக்களுக்கு 11.9 மில்லியன் டொலர் முற்பணமாக வழங் கப்பட்டது.

எனினும் பசுக்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படவில்லை என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (நி)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
## 76/7, 76/8, 76/9 கள்ளி ஒழுங்கை-வட்டாரம்-03

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, வட்டுக்கோட்டை உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 03, கள்ளி ஒழுங்கை, இல.76/7, 76/8, 76/9 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் மகேந்திரன் விஸ்வலிங்கம் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்கு உட்படும் ஆதனத்தை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஓர் பகுதியினை **செல்வக்குமார குலசிங்கம் பெண் சிவயோகநாயகி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 290/14.03.1981 ம் இலக்க உறுதியால் **நாகலிங்கம் நடராசா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் குறித்த ஆதனத்திற்குரிய அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடாது குறித்த நாகலிங்கம் நடராசா தனது பெரிய தாயார் கார்த்தியேசு கைம்பெண் தெய்வானைப் பிள்ளையிடமிருந்து தனக்கு வந்தடைந்த உரிமையும், 35 வருட கால ஆட்சியுமென வெளிப்படுத்தியிருந்தார்.

பெயர் மாற்றத்திற்கு உட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றைய பகுதியினை **நாகலிங்கம் நடராசா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10637/22.10.1963 ம் இலக்க உறுதியால் **ஜோர்ஜ் அந்தோனி விக்ரர் பிள்ளைநாயகம், செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்** ஆகியவரிடம் இருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஈடு 3989ம் இலக்க வழக்குக் கோவை பதிவில் காணப்படவில்லை என யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

குறித்த **செல்வக்குமாரகுலசிங்கம் பெண் சிவயோகநாயகி** ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 291/14.03.1981 ம் இலக்க உறுதியால் குறித்த **நாகலிங்கம் நடராசா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நாகலிங்கம் நடராசா பெண் அன்னம்மா** ஆகியவர் மேற்படி ஆதனங்களை பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 295/23.03.1981 ம் இலக்க உறுதியால் குறித்த **துரைசிங்கம் செல்வக்குமாரகுலசிங்கமும் பெண் சிவயோகநாயகியும்** ஆகியவரிடம் இருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நடராசா சறோஜினி** ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு மீ.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 582/24.12.1989ம் இலக்க உறுதியால் குறித்த **நடராசா கைம்பெண் மகேஸ்வரி மறுபெயர் அன்னம்மா** ஆகியவரிடம் இருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**விசுவலிங்கம் இலங்கேஸ்வரலிங்கம்** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **சோ.தேவராஜா** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7890/27.08.2017 ம் இலக்க உறுதியால் குறித்த **இலங்கேஸ்வரலிங்கம் பெண் சறோஜினி** ஆகியவரிடம் இருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நடராசா கணேசரத்தினம்** ஆகியவர் குறித்த 5ம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆதனத்தில் மற்றைய பகுதியினை பிரசித்த நொத்தாரிசு மீ.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 583/24.12.1989 ம் இலக்க உறுதியால் குறித்த **நடராசா கைம்பெண் மகேஸ்வரி மறுபெயர் அன்னம்மா** ஆகியவரிடம் இருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **விசுவலிங்கம் இலங்கேஸ்வரலிங்கமும் பெண் சறோஜினியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு சிந்துஜா நடேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 517/01.08.2017 ம் இலக்க உறுதியால் குறித்த **நடராசா கணேசரத்தினம்** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**குட்டித்தம்பி கணபதிப்பிள்ளை மகள் ஜெகதீஸ்வரி** ஆகியவர் குறித்த 3 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆதனத்தில் மற்றைய பகுதியினை பிரசித்த நொத்தாரிசு ம.கதிரவேலு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6196/25.11.1973 ம் இலக்க உறுதியால் குறித்த **நாகலிங்கம் நடராசா** ஆகியவரிடம் இருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

மேற்படி ஆதனங்களை **தம்பு சீவரட்ணமும் பெண் சிவபூஷணமும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9347/17.04.2021 ம் இலக்க உறுதியால் குறித்த **சபாவதிப் பிள்ளை அரியராசாவும் பெண் ஜெகதீஸ்வரியும், விசுவலிங்கம் இலங்கேஸ்வரலிங்கமும் பெண் சறோஜினியும்** ஆகியவர்களிடம் இருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த **தம்பு சீவரட்ணமும் பெண் சிவபூஷணமும்** ஆகியவர்கள் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங் களுடன் **30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தம்பு சீவரட்ணமும் பெண் சிவபூஷணமும்** ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(C-5329)


# இராசிபலன்

26.11.2022
கார்த்திகை 10 , சனிக்கிழமை
திருதியை முன்னிரவு 11.05 மணிவரை

மூலம் முன்னிரவு 6.39 மணிவரை
சுபநேரம் -3.12-4.42 மணிவரை
இராகுகாலம் -9.12-10.42 மணிவரை

சந்திராஷ்டமம்
ரோகினி, மிருகசீரிடம்

**வளவன்**


மேஷம்

அச்சுறுத்தல்கள் அக ன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழ காக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர் கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கடகம்

எதிர்ப்பாக இருந்தவர் கள் மனம் மாறுவர், கடன்சுமை குறைய வழி வகை செய்வீர்கள், உறவினர்களின் சந்திப் பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்


நீண்ட நாளைய விரு ப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் ஒத் துழைப்புக்கள் கிடை க்கும், நல்லவர்களின் தொடர்பு கள் நீடிக்கும்.


மகரம்


குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோ சனையைக் கேட்டு நட ப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண் ணம் உருவாகும், சயன சுகக் குறை வான நாள்.


ரிஷபம்


சுற்றத்தாரை அனுசரி த்துச் செல்வது நல்லது, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பயணங்க ளின் போது விழிப்புணர்வு அவ சியம், உடல் நலக் குறைவான நாள்.


சிம்மம்


பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்க ளில் ஆர்வம் காட்டுவீ ர்கள், தாழ்ந்த சுபாவ முண்டு, பூர்வீகச் சொத்துக்கள் சம் பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.


விருச்சிகம்


நண்பர்களின் ஒத்து ழைப்பால் நலம் காண் பீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன் னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


கும்பம்


எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடை க்கும், குடும்ப மகிழ் ச்சி அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மிதுனம்


நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நட ந்து கொள்வர், ஆசை ப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கன்னி

இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிக ரிக்கும் நாள், கொள் கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


தனுசு

சோம்பலை விலக்கு வது நல்லது, சவால் களை சாமர்த்திய மாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


மீனம்

சுப நிகழ்வுகளில் கல ந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, செயற் பாடுகளில் தீவிரம் காட் டுவீர்கள், தூர தேசத்தி லிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

குறுகிய மனித வாழ்வின் காலத்தை வீணாக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தப் போக்கு

## குற்றச்சாட்டை மறுக்கிறது யாழ்.பொலிஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த பொலிஸார் உற்சாகமாக செயற்படவில்லை, உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என பல முறைப்பாடுகள், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அந்த குற்றச்சாட்டுகளை தான் முற்றாக நிராகரிப்பதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி துஷிதா உப்புல் சென விரத்தின தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் இந்த போதைப் பொருளை பாவிக்கிறார்கள்.

இந்த போதைப் பொருள் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களால் விநியோகிக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படுகின்றது.

எனவே இந்தப் போதைப் பொருளை யார் கொண்டு வருகிறார்கள், யார் விற்பன்ன செய்கிறார்கள் என்ற விடயத்தினை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை என மேலும் தெரிவித்தார். (4-6-33)

# வழக்காளிகளால் வைப்பிலிடப்பட்ட பணத்தைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்று முடிந்த நானாவிதம் 71/2014, பிரிவிடல் 7215, காசு 48/2012 என்ற வழக்கு இலக்கங்களில் வழக்காளிகளால் வைப்பிலிடப்பட்ட சிறு தொகைப்பணங்கள் மன்றின் பாதுகாப்பில் உள்ளன.

அவற்றினை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுவதுடன் தவறின் 14 நாட்களுக்குப்பின் அரசுடைமை ஆக்கப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

# தொண்டைமானாறு வீதியில் இறந்த நிலையில் முதலை



(அராலி)

யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு பகுதியில் நேற்று முதலையொன்று வீதியில் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் இருந்து தொண்டைமானாறு செல்லும் வீதியிலேயே முதலை வீதிக்குக் குறுக்காக உயிரிழந்த நிலையில் இருப்பதாக அவ்வீதியால் பயணித்தவர்கள் தெரிவித்தனர்.

தொண்டைமானாறு ஏரியில் முதலை இருப்பதாக ஏற்கனவே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-33-104)



யாழ்ப்பாண விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தினால் கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நடத்தப்பட்ட வரவேற்பு உபசார நிகழ்வில் பதிவாளர் நாயகம் பிரபாத் அபேவர்த்தன, யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன், அகில இலங்கை (M.B.D) பதிவாளர் சங்கத் தலைவர் துஷ்மந்த கருணநாயக்க ஆகியோர் சங்கத் தலைவி திருமதி.வ.சோமசூரியசிங்கம், செயலாளர் டாக்டர் J.ஜெயலன் ஆகியோரினால் கௌரவிக்கப்பட்டனர்.

# மலர்க் கண்காட்சி இறுதி நாள் நாளை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகைவாசம் என்ற மலர்க்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

மலர்ச்செடிகள் மற்றும் மரக்கன்றுகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் 'மலர் முற்றம்' என்ற காட்சித்திடல் சங்கிலியன் பூங்காவில் கடந்த 18 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இக் கார்த்திகை வாசத்தில் காட்சிக் கூடங்கள் நாளை 27 ஆம் திகதி வரை திறந்திருக்கும். (4-6)

# பாலத்தை புனரமைக்க பிரதேச சபை நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மறவன்புலவு பொன்னம்பலம் வீதியில் இடிந்த நிலையில் காணப்படும் பாலத்தை புனரமைக்க சாவகச்சேரிப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருப் பதாக பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பொன்னம்பலம் வீதியில் உள்ள பாலம் முக்கியமான வாய்க்கால்கள் இரண்டினை இணைக்கும் பாலமாக அமைந்துள்ளது. எனவே விவசாய அமைப்புக்கள் இதனை புனரமைக்கக் கோரி கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை குறித்த பாலத்தை அமைத்துக் கொடுக்க தீர்மானித்துள்ளது. அரசாங்க அதிபர் மற்றும் மாகாண பிரதம பொறியியலாளர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக பிரதேச சபை குறித்த வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

## கார்கில்ஸ் நிறுவனத்தினால்

# விவசாயிகள் நலன் பேணும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு புலமைப் பரிசில் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

கார்கில்ஸ் நிறுவனத்தின் வருடாந்த விவசாயிகளின் நலன் பேணும் திட்டத்தின் கீழ் நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 74 பயனாளிகளுக்கு புலமைப் பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

நீண்டகால வரலாற்றைக் கொண்ட கார்கில்ஸ் நிறுவனமானது விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் நலன் பேணும் திட்டத்தின் கீழ் வருடந்தோறும் பல்வேறுபட்ட சமூக வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இந்த வருடம் நாடு பூராக வும் பல மில்லியன் ரூபாய் செலவில் சமூக நலன் சார் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் நேற்று சுமார் மூன்று மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியீட்டத்தில் சமூக நலன் நோக்கு திட்ட புலமைப் பரிசில் வழங்கி வைக் கப்பட்டது.

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், கால்நடை வளர்ப்பு திணைக்கள பணிப்பாளர், கார்கில்ஸ் நிறுவன பிரதம முகாமையாளர்களில் ஒருவர் மற்றும் கார்கில்ஸ் நிறுவனத்தின் வடக்கு யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர்கள் விரிவாக்கம் பிரிவு முகாமையாளர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (4-6-33)

# ஊழியர்களுக்கு ஒவ்வாமை; பரிசோதிக்க குழு

(அராலி)

சங்கானை பிரதேச செயலகத்தின் 15 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உடலில் ஒவ்வாமை ஏற்பட்டதால் சங்கானை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி ஜெசிதரன் தலைமையிலான சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவினர் நேற்று பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்தனர்.

இது தொடர்பாக சங்கானை பிரதேச செயலர் திருமதி. பொ.பிரேமினியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வினவியபோது "உத்தியோகத்தர்களுக்கு தோலில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக தண்ணீரினை பரிசோதிப்பதற்காக குறித்த குழுவினர் நேற்று விஜயம் செய்தனர்" என அவர் தெரிவித்தார். இதன்போது அங்கு பெறப்பட்ட தண்ணீர் மாதிரியானது பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் அதிரிகரிக்கும் தொற்று உலக நாடுகள் அச்சத்தில்



(பீஜிங்)

சீனாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 32,943 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த சில நாட்களாக கொவிட் பாதிப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த புதன் கிழமை அங்கு 31,656 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இது கடந்த பல மாதங்க ளில் இல்லாத அளவிற்கு அதிக பாதிப்பு எண்ணிக்கை ஆகும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாதிப்பு மேலும் அதிகரித்து ள்ளது. புதிதாக 32,943 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 3,103 பேருக்கு அறிகுறிகள் உள்ளன.

29,840 பேருக்கு எந்த வித கொரோனா அறிகுறி களும் இல்லை என்று தெரி விக்கப்பட்டுள்ளது. இறப்புகள் எதுவும் இல்லை.

சீனாவில் கொரோனா பாதிப்பு தற்போது அதிகரித்து வருவது உலக நாடுகளி டையே அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது.

சீனாவில் இதுவரை கொவிட் பாதிப்பால் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 5,232 ஆகும். மேலும் சீனா வில் இதுவரை உறுதி செய்ய ப்பட்ட கொவிட் பாதிப்புகளின் எண்ணிக்கை 300,619 ஆக அதிகரித்துள்ளது குறிப் பிடத்தக்கது. (நி)

# அபூர்வ 'ஓநாய் நோயால்' அவதிப்படும் இளைஞர்





(டில்லி)

மத்திய பிரதேச த்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 'ஓநாய் நோயால்' பாதிக்கப்பட்டுள் ளார்.

மரபியல்கோளா றால் "ஹைபர்டிரி கோசிஸ்" எனப் படும். ஓநாய் நோய் மிகவும் அபூர்வ மாக ஏற்படும்.

இந்த நோய் எதனால் ஏற்படுகிறது என்பது இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. அதே நேரத்தில் மர பணு குறைபாடுகளால் ஏற்படுவதாக கூறப்படுகிறது. இதற்கு சிகிச்சையும் கிடையாது.

இந்த நோய் ஏற்பட்டால், உடலின் சில குறிப்பிட்ட பகுதிகள் அல்லது உடல் முழுதும், அதிக அளவில் ரோமம் வளர்ச்சி இருக்கும்.

மத்திய பிரதேச மாநிலம் நான்ட் லெடா கிராமத்தைச் சேர்ந்த, லலித் படிதார் என்ற இளைஞர் இந்த நோயால் பாதிக்கப்பட்டு உள் ளார்.

சிறு வயதிலேயே உடல் முழுதும் அவருக்கு ரோமம் வளரத் துவங்கி யது. தன்னுடைய 7 வயது வரை இதை ஒரு பெரிய பிரச்சினையாக லலித் படிதார் எடுத்துக் கொள்ள வில்லை.

ஆனால், ரோமம் அதிகளவில் வளரத் துவங்கியதும், ஊரில் உள்ளவர்கள் தன்னைப் பார்த்து பயப்படுவது, உதாசீனப்படுத்துவது போன்றவற்றால், இது மிகப் பெரிய பிரச்சினை என்பது அவருக்கு புரிய வந்தது.

இந்த நோய்க்கு தற்போதைய நிலையில் எந்த சிகிச்சையும் கிடையாது. அடிக்கடி "ஷேவ்" செய்வது அல்லது முடியை நீக்கும் மற்ற முறைகளை பயன்படுத்துவது மட் டுமே தீர்வாகும்.

இவருடைய குடும்பத்தில் யாருக் கும் இதுபோன்ற பாதிப்பு ஏற்பட்ட தில்லை. இந்நிலையில் தனக்கு எப்படி இந்த நோய் ஏற்பட்டது என்ற புழுக்கத்தில் லலித் படிதார் உள்ளார். இதனால், பள்ளிப் படிப்பை பாதியி லேயே நிறுத்த வேண்டியதாயிற்று. திருமணம் போன்ற நிகழ்ச்சிகள், பொது விழாக்களில் பங்கேற்பதி ல்லை. வீட்டிலேயே முடங்கி கிடக் கிறார். (நி)

# சீனாவில் அடுக்குமாடிக் குடியிருப்பில் பாரிய தீ விபத்து-10 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் சின்ஜியாங் மாகாண த்தில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வடமேற்கில் உள்ள சின்ஜியாங் மாகாணத்தின் உரும்கி நகரில் 21 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று உள் ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று முன்தினம் இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு படையினர் 3 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 9 பேர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக அனுமதி க்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து உயர் மட்ட விசாரணை நடத்தி வருவதாக வும் அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: சூரி 10 செவ் 2 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: O/L நகைவேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13151 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 34 சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: மிருக வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ:G/11203 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 45¾ சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: பட்டதாரி Chartered Accountant தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/13152 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: சூரி 11 செவ் 12 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்:BSc,MSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ:G/11209 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 30½ சூரி 5 செவ் 11 இல்<br>உயரம்: 5' 11"<br>தகைமை/தொழில்: மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு: லண்டன் மட்டும் அல்லது பட்டதாரி<br>தொ.இ: B/13153 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 27½ சூரி 12 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: BSc ஆராய்ச்சி உத்தி யோகத்தர்<br>எதிர்பார்ப்பு: BSc பட்டதாரி<br>தொ.இ:G/11231 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 21 சூரி. செவ் 12 இல்<br>உயரம்: 177 cm<br>தகைமை/தொழில்:O/L (கமம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13156 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 43 சூரி 8 செவ் 4 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: CIMA<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: G/11237 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## மலேசியாவின் புதிய பிரதமராக அன்வார் இப்ராஹிம்

# உத்தியோகபூர்வமாக பதவியேற்பு

(கோலாலம்பூர்)

பல்லின, பல மதங்கள் கொண்ட தென்கிழக்கு ஆசிய நாடான மலேசி யாவில் புதிய பிரதமராக அன்வார் இப்ராஹிம் பதவியேற்றுள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை வழிநடத்துவதாக உறுதியளித்த அவர், நேற்று வெள்ளிக்கிழமை நாட்டின் நிர்வாக தலைநகரான புத்ராஜெயாவில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் காலை 9 மணிக்கு தனது பணி யைத் தொடங்கினார்.

அன்வார் கடந்த சனிக்கிழமை ஒரு முடிவற்ற தேர்தலுக்குப் பிறகு மன்னரால் பிரதமராக நியமிக் கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக் கது. (நி)


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்கள் பாதுகாப்பை உணர வைப்பது ஒவ்வொருவரினதும் கடமை. அனைவரும் இணைந்து பாதுகாப்பான சமத்துவமான சமூகத்தை உருவாக்குவோம்."
(C-5323)

யாழ் சமூக செயற்பாட்டு மையம் Jaffna Social Action Center (JSAC)


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 37





கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்று வாளையும் வேலையும் உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவ்விதம் கோஷமிட்டதை வந்தியத்தேவன் கண்டான். இனிமேல் அங்கிருப்பது அபாயமாக முடியலாம் என்று எண்ணி, தான் படுத்திருந்த இடத்துக்கு விரைந்து சென்று படுத்துக் கொண்டான்.

### 9 ஆம் அத்தியாயம் வழிநடைப் பேச்சு

பாலாற்றுக்கு வடக்கேயுள்ள வரண்ட பிரதேசங்களிலேயே வந்தியத்தேவன் அதுகாறும் தன் வாழ்நாளைக் கழித்தவன் ஆகையால் ஆற்று வெள்ளத்தில் நீந்துவதற்கு அவனுக்குத் தெரியாமலிருந்தது. ஒரு சமயம் வடபெண்ணைக் கரையில் எல்லைக் காவல் புரிந்து வந்தபோது, குளிப்பதற்காக ஆற்றில் இறங்கினான்.

ஒரு பெரிய நீர்ச்சுழலில் அகப்பட்டுக் கொண்டான். அந்தப் பொல்லாத விஷமச் சுழல் அவனைச் சுற்றிச்சுற்றி வரச் செய்து வதைத்தது. அதே சமயத்தில் கீழேயும் இழுத்துக் கொண்டிருந்தது. சீக்கிரத்தில் வந்தியத்தேவனுடைய பலத்தையெல்லாம் அந்தச் சுழல் உறிஞ்சிவிட்டது. "இனிப் பிழைக்க முடியாது, சுழலில் மூழ்கிச் சாக வேண்டியதுதான்!" என்று வந்தியத்தேவன் நிராசை அடைந்த சமயத்தில் தெய்வாதீனமாக நதிச் சுழலிலிருந்து வெளிப்பட்டான். வெள்ளம் அவனை அடித்துக் கொண்டு போய்க் கரையில் ஒதுக்கிக் காப்பாற்றியது!

அன்றிரவு வந்தியத்தேவன் மீண்டும் சென்று படுத்தபோது அவனுக்கு நதியின் சுழலில் அகப்பட்டுத் திண்டாடியது போன்ற அதே உணர்ச்சி ஏற்பட்டது. ஒரு பெரிய இராஜாங்கச் சதிச் சுழலில் தன்னுடைய விருப்பமில்லாமலே விழுந்து அகப்பட்டுக் கொண்டதாகத் தோன்றியது. அந்த நதிச் சுழலிலிருந்து தப்பியது போல் இந்தச் சதிச் சுழலிலிருந்தும் தப்ப முடியுமா? கடவுள் தன்னை மறுமுறையும் காப்பாற்றுவாரா?

அன்று அவன் கடம்பூர் மாளிகையில் நடந்த நள்ளிரவுக் கூட்டத்திலிருந்து அறிந்து கொண்ட விடயங்கள் அவனைத் திக்குமுக்காடச் செய்து விட்டன. சோழ மகா சாம்ராஜ்யத்துக்கு வெளிப்பகைவர்களால் ஏற்பட்டிருந்த தொல்லைகள் நீங்கிச் சில வருடங்கள்தான் ஆகியிருந்தன.

இளவரசர் ஆதித்த கரிகாலர் மகாவீரர், போர்க்கலையில் நிபுணர் ராஜதந்திரத்தில் சாணக்கியர். தம்முடைய அறிவாற்றல்களையும் சோழநாட்டுப் படைகளின் போர்த் திறனையும் பூரணமாகப் பயன்படுத்தி இரட்டை மண்டலத்துக் கிருஷ்ண மன்னனின் ஆதிக்கத்தைத் தொண்டை மண்டலத்திலிருந்து அடியோடு தொலைத்தார்.

வெளிப்பகை ஒருவாறு ஒழிந்தது. இந்த நிலைமையில் உட்கலகமும் சதியும் தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றனர். வெளிப்பகையைக் காட்டிலும் அபாயகரமான இந்த உட்பகையின் விளைவு என்ன ஆகும்?

சோழ நாட்டின் புகழ்பெற்ற வீரர்களும் அமைச்சர்களும் தலைவர்களும் அதிகாரிகளும் அல்லவா இந்தப் பயங்கரமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்? பழுவேட்டரையரும் அவருடைய சகோதரரும் எப்பேர்ப்பட்டவர்கள்? அவர்களுடைய சக்தி என்ன? செல்வாக்கு என்ன? இங்கே இன்று கூடியிருந்த மற்றவர்கள்தான் எவ்வளவு பெயரும் புகழும் செல்வாக்கும் பராக்கிரமமும் வாய்ந்தவர்கள்? இத்தகைய கூட்டம் இதுதான் முதற் கூட்டமாயிருக்குமா? பழுவேட்டரையர் மூடுபல்லக்கில் மதுராந்தகரை வைத்து இவ்விதம் இன்னும் எத்தனை இடங்களுக்குக் கொண்டு போயிருக்கிறாரோ? அடடா! முதிய வயதில் ஓர் இளம்பெண்ணை மணந்து கொண்டது இவருக்கு இந்தச் சதிகார முயற்சிக்கு எவ்வளவு சாதகமாகப் போய்விட்டது?

சோழ சிம்மாசனத்துக்கு உரியவர் இளவரசர் ஆதித்த கரிகாலர் தான் என்பது பற்றி இன்று வரை வந்தியத்தேவனுடைய மனதில் எவ்விதச் சந்தேகமும் உதிக்கவில்லை. போட்டி ஒன்று ஏற்படக் கூடும் என்று அவன் கனவிலும் கருதவில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## நாட்டு நலன் எதில்

துர்க்காபுரியில் தேவசர்மா என்ற பொருளாதார நிபுணர் இருந்தார். அந்நாட்டு மன்னன் அவரது யோசனைகளைக் கேட்டு நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து வந்ததால் நாடு வளமாய்த் திகழ்ந்தது.

துர்க்காபுரியை அடுத்து பார்வதிபுரி என்ற நாடு இருந்தது. அந்நாட்டு மன்னனும் துர்க்காபுரி கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பற்றி வந்தான். ஆனாலும் அவனது நாடு வளம் பெறவில்லை. தன் கொள்ளைகளை அமுல்படுத்திய பார்வதிபுரி ஏன் வளம் பெறவில்லை என்பதைக் கண்டறிய தேவசர்மா அந்நாட்டிற்குப் போய் வரத் தீர்மானித்தார். அங்கு அவரது உறவினர்கள் இருந்ததால் அவர்களைக் காணச் செல்வதாகக் கூறிவிட்டுக் கிளம்பினார்.

இரு நாடுகளுக்கிடையே உள்ள காட்டின் வழியே தேவசர்மா சென்று கொண்டிருந்த போது ஒரு மரத்தின் மீதிருந்து ஒரு பிசாசு அவர் முன் குதித்து நின்றது. அதைக்கண்டு அவர் சற்று பயந்து தான் போனார்.

அப்போது அப்பிசாசு "பயப்படாதீர்கள்.நான் பார்வதி புரி நாட்டின் பணக்காரர்களில் ஒருவன். நான் கிராமத்தில் வாழ்ந்து வந்ததால் என்னைப் பற்றி மற்றவர்களுக்கு அதிகமாகத் தெரியவில்லை. நான் சம்பாதித்த பணத்தை எல்லாம் ஒரிடத்தில் புதைத்து வைத்திருக்கிறேன். அது என் வீட்டுக்காரர்களுக்க் கூடத் தெரியாது. அவர்களுக்குச் சாப்பாட்டிற்குக் குறை இல்லாததால் என் புதையலைப் பற்றிக் கவலைப்படவில்லை.

நான் அந்தப் பணத்தை யாருக்கும் உபயோகப்படாமல் புதைத்து வைத்ததால் தான் இப்படிப் பிசாசாகித் திரிகிறேன். அந்தப் பணத்தைப் பயனுள்ள செலவிற்குக் கொடுத்தால் நான் இந்த உருவை விட்டு சொர்க்க லோகம் அடைவேன். தாங்கள் பொருளாதார நிபுணர் தேவசர்மா என்பது எனக்குத் தெரியும். நான் சொர்க்கம் அடையத் தாங்கள் உதவி புரிய வேண்டும்" எனக் கைகூப்பி வேண்டியது.

தேவசர்மாவும் "இதில் யோசிக்க என்ன இருக்கிறது? உன் பணத்தை எல்லாம் இந் நாட்டு அரசனிடம் கொடுத்து விடுகிறேன். அவர் மக்கள் நலனுக்காக அதைச் செலவு செய்யலாம். பாதைகள் போடலாம். குளங்கள் வெட்டலாம். சத்திரங்கள் கட்டலாம். இப்படி அவர் அதனைப் பயனுள்ள விதத்தில் செலவிடுவார்" என்றார். பிசாசோ "ஐயா! இந்நாட்டு அரசரிடம் பணத்தைக் கொடுத்தால் அதைத் தன் சுக போகங்களுக்காகச் செலவிட்டு விடுவார். நீங்கள் சொன்னபடி எல்லாம் அவர் செலவிட மாட்டார். அதனால் அவரிடம் கொடுக்க வேண்டாம்" என்றது.

அது கேட்டு தேவசர்மா "சரி, நாட்டில் பல நற்பணி மன்றங்கள் உள்ளனவே அவற்றில் சிலவற்றிற்குக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அடிமையாக இருக்கமாட்டேன். ஆகவே நன் எஜமானாகவும் இருக்க மாட்டேன். இதுதான் ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம்.
*– ஆபிரகாம் லிங்கன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீரசேகரவை சிங்கள மக்கள் விரைவில் ஓட ஓடத் துரத்துவர்

திரைப்படத்தில் வில்லன் போல, நாடகங்களில் நகைச்சுவைப் பாத்திரங்கள் போல இலங்கை அரசியலில் பேரினவாத அட்டமத்துக்கள் தொடர்ந்தும் இருக்கவே செய்கின்றன.

ஆம், இந்தப் பிரகிருதிகளாலேயே இந்த நாடு இத்துணை அவலத்தைச் சந்தித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக ஏழை மக்கள் ஒருநேர உணவோடு காலம் கழிக்கின்ற அவலநிலைக்கு ஆளாகியுள்ளனர்.

அதிலும் குறிப்பாக உணவு மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் கிடைக்காத காரணத்தால், ஏழைக் குழந்தைகள் மந்த போசனைக்கு ஆளாகித் தவிக்கின்றனர்.

எனினும் இதுபற்றி இம்மியும் சிந்திக்காத சில பேரினவாத அரசியல்வாதிகள் இந்த நாடு தொடர்ந்தும் குழப்பநிலையில் இருக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

அவ்வாறான பணியை செய்வதில் இப்போது பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

ஒரு காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அப்போதைய அமைச்சராக இருந்த சிறில் மத்யூ பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நெவில் பெர்னாண்டோ போன்ற இனவாதிகள் கக்கிய விசம் கொஞ்சமல்ல.

அந்த இரண்டு ஈனர்களும் இன்று இல்லையாயினும் அவர்கள் அன்று விதைத்த நஞ்சு விதைகள் இன்றுவரை இந்த நாட்டை அழித்து நிற்பதுடன் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைக் காவு கொண்டு தமிழ் மக்களை கண்ணீர்க் கடலில் தத்தளிக்க விட்டுள்ளது.

இந்தநிலைமைகள் பட்டவர்த்தனமாக இருக்கின்ற போதிலும் இப்போது பாராளுமன்ற உறுப்பினர் வீரசேகர போன்றவர்கள் பேரினவாதத் தீயை மூட்டி இந்த நாட்டை நிர்மூலமாக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

அதன் ஓர் அங்கமே அதிகாரப் பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என வீரசேகர கூளுரைத்துள்ளார்.

இவ்வாறு பேரினவாதத்தை விதைக்கின்ற வீரசேகர ஓர் உண்மையை உணரவில்லை.

அதாவது இந்த நாடு வாழ வேண்டுமாயின், இனவாதப் பேயைத் துரத்த வேண்டும் என்ற உண்மையை சிங்கள மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

ஆக சிறில் மத்யூ, நெவில் பெர்னாண்டோ போன்றவர்கள் மூட்டிய இனவாதத் தீயை பேரொளி என நினைத்த சிங்கள மக்கள் அல்ல இப்போது இருக்கின்றவர்கள்.

எனவே இப்போது இருக்கின்ற சிங்கள மக்கள் வீரசேகர போன்ற இனவாதப் பேய்களை ஓட ஓடத் துரத்துவர். அதற்கான ஒத்திகையும் அரங்கேற்றமும் ஏலவே நடந்தாயிற்று.

# அடக்கு முறைக்கு எதிராக அச்சமடைய வேண்டாம் அரசுக்கு எதிராக வீறுகொண்டு எழுங்கள்

## பொன்சேகா அறைகூவல்

(கொழும்பு)

ஜனநாயகத்துக்கு எதிராக அரசு வன்மையான முறையில் செயற்படுகின்றது. மக்கள் தமது பிரதேசங்களில் இருந்து போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அரசின் அடக்குமுறைக்கு அச்சமடைய வேண்டாம். மக்கள் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஸ்திரமான கொள்கை இல்லாமல் இந்த அரசு செயற்படுகின்றது. எதிர்காலத் தலைமுறையினரது எதிர்காலம் இல்லாமல் போகின்றது என்பதை நாட்டு மக்கள் இனியாவது விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாதுகாப்புத் தரப்பினரும் அரசின் முறையற்ற செயற்பாடுகளுக்கு அகப்பட்டுள்ளார்கள். ஜனநாயகப் போராட்டத்தின் ஊடாகவே தீர்வு காண முடியும். மக்கள் போராட்டத்துக்கு ஊழல் அரசியல்வாதிகள் அச்சம் கொண்டுள்ளார்கள்.

காலிமுகத்திடலிலும், கொழும்பிலும் போராட்டத்தில் ஈடுபட முடியாவிட்டால் பரவாயில்லை. பொதுமக்கள் தங்களின் பிரதேசங்களில் இருந்து போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்..

அரசின் அடக்குமுறைக்கு அச்சமடைய வேண்டாம். மக்கள் போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் பொறுப்புடன் செயற்படவில்லை. புலனாய்வுப் பிரிவை மறுசீரமைக்க வேண்டும்.

அரசுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களுக்கு எதிரான அடக்குமுறையை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயை அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## 50 சாராய போத்தல்களுடன் இளவாலையில் ஒருவர் கைது

இளவாலை வீதியில் 50 கால் போத்தல்கள் சாராயத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவர் சாராயத்தை எடுத்துச் சென்ற மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது.

காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் அளவெட்டி பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களுடன் இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். குறித்த சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## சமபோஷா விற்பனைக்கு நீதிமன்றம் தடை

(கொழும்பு)

சமபோஷா என்ற வர்த்தக நாமத்தில் மேலதிக தானிய உணவுகளை விநியோகம் செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதித்து மொறவக்க நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தப் பொருட்களைக் கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்பியதில் அஃப்லாடோக் சின் அளவு அதிகமாக இருந்ததை வெளிப்படுத்தியதாக நீதிமன்றத்தில் அறிக்கை அளித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, மொறவக்க பிரதேசத்துக்கு உட்பட்ட இப்பொருளின் விற்பனையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யுமாறும், தற்போது சந்தையில் உள்ள பொருட்களின் இருப்புகளை உடனடியாக அகற்றுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)

## நாட்டில் எடை குறைந்த 22 ஆயிரம் குழந்தைகள் அடையாளம்

(கொழும்பு)

குறைந்த எடையுடைய 22,000 குழந்தைகள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் தகவல் வெளியிட்டுள்ளது.

5 வயதிற்கு உட்பட்ட 10 இலட்சம் சிறுவர்களின் போசாக்கு நிலைமையை ஆராய்ந்ததன் பின்னர் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக இந்த வேலைத்திட்டத்தின் தலைவராக செயற்படும் ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி சுரேன் பட்டகொட தெரிவித்துள்ளார்.

குறைந்த நிறையுடைய குழந்தைகள் வசிக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் 14,000 கிராம சேவகர் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்."
*-வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பிரதி பொது முகாமையாளர் அலுவலகம் - மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ்.மாவட்ட செயலகம் துளசி மஹால், யு.எஸ் விடுதி, மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி, முலவை சந்தி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம்-மன்னார் வைத்தியசாலை மன்னார், மன்னார் நீர்வழங்கல் சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க் ரோடு அகுடிக் கம்பெனி பிறைவேற் (லிமிட் டெட்) (கடல் உணவு களஞ்சியம்), பெரிய கரைசல் பல் மேய்ரா ஹவுஸ், தப்ரோரேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ், ஐஸ் தொழிற்சாலை, நீர்வழங்கல் -தோட்டக்காடு, இளைஞர் படை கார்கில்ஸ் புட்சிற்றி-மன்னார் இலங்கை போக்குவரத்து சபை,-மன்னார், டயலொக் தள்ளாடி நடுக்குடா, பேசாலை-ஐஸ்தொழில் சாலை-தள்ளாடி, மன்னார் நகரம், கொன்வேண்ட் வீதி, எழுத்தூர், எமில் நகர், எருக்கலம்பிட்டி, ஜோசப்வாஸ் நகர், கடலேரி வீதி, கட்டுக்காரங் குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு, பொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மூர்வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமன்ஸ் ஆடையகம், இளையோர் சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஒல்லிமோட்டை, தடப்பாடி நீர்வழங்கல், பள்ளிமுனை, பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு கடல்பக்கம், புதுக்குடியிருப்பு புகையிரத நிலையம், சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநாவற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவமுகாம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தர்ராபுரம், தாரபுரத்திட்டம், தரவன்கொட்டு, தோட்டவெளி, துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, தும்பு குடியிருப்பு திட்டம், யு.சி.மைதானம் -மன்னார், வங்காலைப்பாடு பயிற்சி மையம் (ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்கு உதவாமல் இருந்த

# 16 ஆயிரம் கிலோ நெல் மீட்பு

## வவுனியாவில் ஒருவர் கைது

**(நெளுக்குளம்)**

**வவுனியாவில் உள்ள தனியார் நெல் களஞ்சிய சாலையில் இருந்து பொலநறுவைக்கு நெல் மூடையினை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று நேற்று முன்தினம் மாலை மீக்கப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு பொது சுகாதார பரிசோதகர் அலுவல கத்தினர் தெரிவித்துள்ளனர்.**



பாவனைக்கு உதவாத வகையில் இருந்த 16,000 கிலோ கிராம் எடையயுடைய நெல் ஏற்றிச் சென்ற லொறியொன்றே இவ்வாறு பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

ஈரற்பெரியகுளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே சரக்குகளை ஏற்றிச் சென்ற லொறியும் லொறியின் பொறுப்பாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நெல் இருப்பு லொறி மற்றும் நெல் இருப்புக்களை ஏற்றிச் சென்ற நபரும் நேற்று வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். சம்பவம் தொடர்பில் வவுனியா தெற்கு பொது சுகாதார பரிசோதகர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-299)

# அமிர்தலிங்கம் காண்டீபனின் இறுதிக் கிரியைகள் நாளை



(லண்டன்)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மகன் அமிர்தலிங்கம் காண்டீபன் கடந்த 12 ஆம் திகதி லண்டனில் காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் நாளை 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இடம்பெறும். (4-6)

# செம்முகம் ஆற்றுகை குழுவின் நாடக விழா

(யாழ்ப்பாணம்)

செம்முகம் ஆற்றுகைக்குழு வழங்கும் புதிய வாழ்விற்கான அரங்கப் பயண நாடகவிழா இன்றும் நாளையும் மாலை 6 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி அரங்கில் இடம்பெறவுள்ளது. அந்தவகையில் இக்குழுவினரால் நெறியாள்கை செய்யப்பட்ட முடிவுறாக் கவிதை, குறுநாடகம், அன்ரன் செக்கோவின் புகையிலை ஓராள் அரங்கு, பேய்க் கரட்டான் ஓராள் அரங்கு, நாவல் சட்டை குறுநாடகம், யானைக் குட்டி நிழற்பாவை அரங்கு, என துரு நோய்ஓராள் அரங்கு, சாப்பாட்டு மேசை குறுநாடகம் ஆகியன மேடையேற்றப்படவுள்ளதோடு நாளை மேற்குறித்த குழுவினரால் ஆற்றுகை செய்யப்பட்ட லெச்சுமி குறுநாடகம், திசைமுகம் குறுநாடகம், வருவார்கள் குறுநாடகம், நிலை குறுநாடகம், மூன்று நொடி ஓராள் அரங்கு, முட்டை குறுநாடகம், நிலக்குமிழிகள் சமகால அரங்காற்றுகை ஆகிய நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன. (4-6)




யுத்தத்திற்கு பின்பு வடக்கு-கிழக்கு பகுதிகளில் THE HALO TUST நிறுவனம் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டை முன்னெடுத்து 20 ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில் 20 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு கிளிநொச்சி வடமாகாண விளையாட்டு கட்டடத்தொகுதி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

(படம்- தேவானந்தன்)


## பெயர் மாற்றம்

உடுவில் தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 545893274V கொண்ட வசந்தமல்லிகா ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை வசந்தமல்லிகாதேவி என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

(13570) வசந்தமல்லிகாதேவி


# கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை பகுதியில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது, 15 லீற்றர் கசிப்புடன் அதே பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-6-104)


# துரோகிகளின் சதியில் மாண்ட 15 வருட நினைவில்



அமரர்.

சிமையானந்தகுரு பரிமளன்

மலர்வு: 29.01.1978
உதிர்வு: 26.11.2007
திதி:துதியை 26.11.2022

பாசத்தின்திருவுருக்களாய்பிறந்த
எம் அன்புத்தம்பியே
கூடிழந்த பறவைகளாய்
தவிக்கின்றோம் நாங்கள்.
ஆண்டு ஆயிரம் ஆனாலும் ஆறாது உம்
துயரம் உனை அழித்த அரக்கர்கள் அழியும்
காலமிது. அவர்கள் வருவார்கள் உன்னிடமே
காத்திருப்பாய் உன் துணையாய்.

1. காலம் விரைவில் பதில் சொல்லும்
2. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
இறுதியில் தர்மமே வெல்லும்

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13566)

கொம்மந்தறை, வல்வெட்டித்துறை. குடும்பத்தினர்


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 380 | 350 |
| உருளைக்கிழங்கு | 170 | 210 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 200 |
| தக்காளி | 350 | 300 | 320 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 180 | 180 | 200 |
| கோவா | 250 | 250 | 280 | 320 |
| கரட் | 300 | 400 | 480 | 520 |
| பூசணி | 120 | 180 | 120 | 120 |
| புடோல் | 300 | 280 | 200 | 250 |
| வாழைக்காய் | 160 | 160 | 130 | 120 |
| சின்ன வெங்காயம் | 600 | 650 | 600 | 800 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 240 | 250 |
| பாகற்காய் | 500 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 200 | 140 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 450 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 500 |
| பீற்றூட் | 200 | 300 | 400 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 200 | 180 | 250 | 200 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 260 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | 400 | 500 |
| முள்ளங்கி | 160 | 120 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 45 | 40 |
| ஈரப்பலா | 80 | 160 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண தரப்...

2021, மே 23 முதல் ஜூன் 01 வரை நாடளாவிய ரீதியில் 3,844 பரீட்சை மையங்களில் நடைபெற்ற இந்தப் பரீட்சைக்கு மொத்தமாக 517,496 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

அவர்களில் 407,129 பேர் பாடசாலை மாணவர்கள் மற்றும் 110,367 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர். (ம-7)

## கூட்டமைப்பின்...

யங்களை கலந்தாலோசித்து தீர்மானிப்பதற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு பேச்சின் போது விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தயாராக இருக்கின்றனர் என்ற செய்தியைக் கூட்டமைப்பினரின் அண்மைய தீர்மானம் வெளிப்படுத்தியுள்ளது.

நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள் ஊடாகவே தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஈடேற்ற முடியும் என்று கடந்த 35 வருடங்களாக நான் கூறி வருகின்ற யதார்த்தத்தைக் கூட்டமைப்பினர் தற்போது புரிந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது என கூறியுள்ளார். (ம-7)

## யாழில் நீண்ட...

தேக நபர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கோப்பாய் பகுதியில் வழிப்பறிக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும், நெல்லியடியில் திருடப்பட்டு வழிப்பறிக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் கோப்பாய், நெல்லியடி, கொடிகாமம் ஆகிய இடங்களில் வழிபறி செய்யப்பட்டது என்று நம்பப்படும் 3 சங்கிலிகளும் கைப்பற்றப்பட்டன.

அதேநேரம், சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நகைக்கடை உரிமையாளர் ஒருவரும் பெண் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நுட்பமான முறையில் மோட்டார் சைக்கிள்களைத் திருடி, வீதியில் செல்லும் பெண்களிடம் வழிப்பறி செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்றும், கடந்த 3 மாதங்களாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடந்த வழிப்பறிக் கொள்ளைகளுடன் இவர்களுக்குத் தொடர்பு உண்டு என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

## ராஜபக்ஷக்களிட...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மன்றில் சமர்ப்பித்த கடிதம் தொடர்பிலேயே இந்த கருத்தை வெளியிட்டார்.

தமது கடிதத்தில் தேர்தல் உட்பட்ட 5 விடயங்கள் தொடர்பில் வலியுறுத்தல்களை விடுத்திருந்ததாகவும் எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டார்.

இதனை விடுத்து, தமக்கு பிரதமர் பதவிவேண்டும் என்று ராஜபக்ஷர்களிடம் மலர்த் தட்டை ஏந்திச்செல்லவில்லை என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (ம-7)

## யாழைச்...

போலி ஆவணங்களுடன் வெளிநாடு செல்ல முயற்சித்த இரு பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு ஓமான் நாட்டுக்கு செல்ல முயற்சித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக இருவரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## தலைவர்...

ரணில் ஜனாதிபதியாகியுள்ள நிலையில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது. (ம-7)

## தமிழ் கட்சிகள்...

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, 3 பிரதான விடயங்களை முன்னிறுத்த தமிழ் தேசிய கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ் கட்சிகளின் கலந்துரையாடல் நேற்று கொழும்பில் இரா.சம்பந்தனின் வீட்டில் நடைபெற்ற போது, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரன், வினோநோகராதலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகிய தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், க.வி.விக்னேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய தமிழ் மக்கள் கூட்டணியினரும் நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இதன்போது, காணி அபகரிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும். அபகரித்த காணிகளை விடுவிக்க வேண்டும்.

இப்போதுள்ள அதிகார பரவலாக்கல் தொடர்பான அரசியலமைப்பு சட்டங்களை முழுமையாக அமுல்படுத்தி, மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.

உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வடகிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புது அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த ஒழுங்குமுறை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதை நாம் வரவேற்கிறோம். ஆகிய விவகாரங்களை முன்னிறுத்தி, ஜனாதிபதியுடனான பேச்சு அழைப்பை அணுகுவதென தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் இறுதியான தீர்மானமொன்றை எட்ட ஏனைய தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடலை நடத்துவ தென்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

## விசமிகளால்...

தரைமட்டமாக்கப்பட்டிருந்தது.

அத்துடன் அங்கிருந்த அனைத்தும் அழிக்கப்பட்டிருந்தன. இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் அரசியல் வாதிகளின் தலையீடு இல்லாமல் இறந்தவர்களுக்கான நினைவேந்தலை செய்யலாம் என்று அறிவித்துள்ள காலத்தில் விசமிகள் இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்துவருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என்றார். (ம-7)

## நீதி...

தமிழ் மக்கள் விடயங்களில் நீதியுடன் செயற்படுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

முல்லைத்தீவு போன்ற வறுமையில் முன்னிலையிலுள்ள மாவட்டங்களை அபிவிருத்தியில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்பது நாட்டில் பலர் முன்வைக்கும் விடயமாகும்.

ஆனால் அதற்கு மாறாக அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதியை எவருக்கும் தெரியாமல் இரகசியமாக வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்படுவது என்பது முல்லைத்தீவு மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும் என கூறியுள்ளார். (ம-7)

# மீனவர்களை விரட்டிய கடற்படை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் மாலை இலங்கை கடற்படையினரால் துரத்தப்பட்டனர்.

இவ்வாறு துரத்திய சமயம் கடற்படையினர் அவற்றை வீடியோ வடிவில் ஒளிப்பதிவு செய்ததோடு இந்திய படகுகளின் இலக்கங்களையும் குறித்துள்ளனர். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2022/11/25
சீட்டிழுப்பு இலக்கம் 4950
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 8 2 5 6 8 8
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.11.25
சீட்டிழுப்பு இலக்கம் 259
விருச்சிகம் 02 05 27 44 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1298
L 10 05 10 20 39

கொவிசெத
திகதி 2022.11.25
சீட்டிழுப்பு இலக்கம் 3192
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
A 25 54 64 72
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.11.25
சீட்டிழுப்பு இலக்கம் -980
P 23 53 55 79
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1405
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 5 4 0 2 1 3
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1751
சீட்டிழுப்பு திகதி : 2022.11.25
ரூ. 3,962,620/-
வெற்றி இலக்கங்கள் 09 38 52 55 A

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.25
சீட்டிழுப்பு இல : 4086
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 3,667,300/-
வெற்றி இலக்கங்கள் 05 12 32 35 W

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,581,644/-
வெற்றி இலக்கங்கள் 01 10 27 58
திகதி 2022-11-25
வெற்றி வாரம் 3637
வர்ணம் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,380,120/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1925 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.11.25 | தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,314,900/-
B 21 26 30 63
3040 849

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 18 30 52 59 70
சீட்டிழுப்பு வாரம் 1101
2022.11.25 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 280,380,749.80
Web : www.dlb.lk

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 253
சீட்டிழுப்பு திகதி 2022.11.25
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 31 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,567,560/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

- வாழைக்குட்டிகள்
- 2 மீன் தொட்டி
- 1 முதிரைக் கட்டில் (6', 4')

(13531)

077 172 1074



# Science Ocean

A/L 2024 Batch II 5.30 - 7.00 pm

ஆரம்பத்தில் இருந்து அனைத்து அலகுகளும் கற்றுத் தரப்படும்.

# PHYSICS

• Tu.Jinthu • A.Kabil

செவ்/வியா/சனி/ஞாயிறு

# Chemistry

Ka Subeesan

திங்கள் | வெள்ளி

ஆரம்பம் 28 Nov

(13577)

Brown Road, Jaffna. 076 236 3470 077 430 7829


## அனைவருக்கும் குழாய் நீர் விநியோகம்

(கொழும்பு)

நாட்டின் சனத் தொகையில் 60 சதவீதமானோருக்கு குழாய் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதாக நீர் வழங்கல் அமைச்சு தெரிவித்துள்ளது.

எஞ்சிய 40 சதவீதமானோருக்கு எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்குள் குழாய் நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அனைவருக்கும் நீர்" என்ற இந்த வேலைத் திட்டத்திற்காக 2,000 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கிவரும் அன்னை புத்தகசாலைக்கு வேலையாட்கள் (பெண்கள்) உடன் தேவை. நேரில் வரவும்

தொடர்பு (13557)

077 248 7662



## காணி தேவை

பண்ணை குறிகாட்டுவான் நயினாதீவு வழியில் பரப்பு ஒன்றுக்கும் 20க்கும் உள் காணி தேவை (13534)

077 663 0462



## நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

மழை காலம் ஆரம்பித்து இருப்பதனால் நீர்க்கசிவு பிரச்சினையால் அவதியுறுகிறீர்களா? அப்படியானால் கவலைப்படாதீர்கள்...

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த் தொட்டி, கோவில் வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள், நீச்சல் தடாகங்கள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதத்துடன் நிவர்த்திசெய்து தருகிறோம்.

1 சதுர அடி 150/=... இருந்து

Skyline Water Proofing (13576)

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743
www.skylineholders.com



SPEED CARGO

## உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை

11 kg இற்கு மேல் விசேட விலை கழிவு

உங்கள் அன்பிற்குரிய உறவுகள் உலகின் எப் பாகத்தில் இருந்தாலும் மிக விரைவாகவும் பாதுகாப்பாகவும் மிகக் குறைந்த கட்டணத்தில் கடிதங்கள், உணவுப் பொருட்கள் பரிசுப் பொருட்கள் என்பவற்றை அனுப்பிட தற்போது யாழ் மண்ணில் (13579)

No-674, Hospital Road, Jaffna. 077 621 7926


## மரண அறிவித்தல்

# சிவஸ்ரீ க.மங்களேஸ்வரக்குருக்கள் சரவணபவசர்மா

(ஓய்வுநிலைஆசிரியர், முன்னாள் வண்ணை ஸ்ரீவெங்கடேஸ்வர பெருமாள் கோவில் அர்ச்சகர்)



மண்ணில்: 27.08.1936 விண்ணில்: 24.11.2022

திருஉத்தரகோசமங்கை வழித்தோன்றலும் காரைநகரை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ மங்களேஸ்வரக்குருக்கள் சரவணபவசர்மா அவர்கள் கடந்த (24.11.2022) வியாழக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவஸ்ரீ க.மங்களேஸ்வரக் குருக்கள் (தியாகராஜாக்குருக்கள்) - புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் புதல்வனும் கொழும்புத்துறை மேற்கு பிரம்மஸ்ரீ தி.ச.தியாகராஜா ஐயர் - ராஜராஜேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சியாமளாதேவியின் அன்புக் கணவரும் கிருபாகரன் (கனடா), கேசவக்குருக்கள் (வவுனியா), ராஜசேகரக் குருக்கள் (கொழும்புத்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஹேமமாலினி, சுபத்திராதேவி, வாகீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாந்தன், ஆரணி, சுதாகரன், சுதர்ஷசன், வைகரி, வர்னேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17, விதானை வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.
077 869 6945, 077 615 2063 (13567)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

# செல்லப்பா தெய்வேந்திரம்



மலர்வு 13.07.1948 உதிர்வு 24.11.2022

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் பிரதேச செயலக வீதி உடுவில் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தெய்வேந்திரம் அவர்கள் கடந்த (24.11.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தம்பிமுத்து சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தவமணி, அருந்தவராணி மற்றும் மகாலிங்கம், ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கணகசபாவதி, பொன்னம்மா, சுப்பிரமணியம், பொன்னம்பலம், ரத்தினசிங்கம் மற்றும் நாகம்மா, பூமணி, புஸ்பவல்லி ஆகியோரின் மைத்துனரும் பாலசுப்பிரமணியம் (லண்டன்), சிவலிங்கம், சத்தியநேசன் (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (லண்டன்), கருணாகரன், ரோகினி, ரகு (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேணுகாகுமாரி (லண்டன்), சபாஜினி, வாசுகி (பிரான்ஸ்), கார்த்திகா (லண்டன்), துஷ்யந்தன், யாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பிரசாந்த் மற்றும் திபானி (லண்டன்), டன்சிகா, யசிகரன் - ரிசாயினி (பிரான்ஸ்), அனோஜன் - சுயின் - சஞ்சே - வைசாலி - விசாலி (லண்டன்), துவக்சனா, கவிலக்சன், விதுஷா, பிரவீன், சாய்லக்சன், அனுஷ்கா - ரெயான் - பிரென் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(13574)

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே:- 076 158 7659

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org